முக்கிய வார்த்தைகள்:
*உண்மை*
*பொய்*
*சொர்க்கம்*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**29 ஆகஸ்ட் 2025 / 05 ரபீவுல் அவ்வல் ஹிஜிரி 1447**

# <u>உண்மை, சொர்க்கம் செல்வதற்கான திறவுகோல் ஆகும்</u>

**الْحَمْدُ لِلَّهِ الَّذِي هَدَانَا لِلْبِرِّ وَالْإِحْسَانِ، وَجَعَلَ فِي نَبِيِّهِ أَكْمَلَ قَائِدٍ لِلْإِنسَانِ. أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَىٰ سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَىٰ آلِهِ وَأَصْحَابِهِ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ حَقَّ تُقَاتِهِ، فَقَدْ فَازَ الْمُتَّقُوْنَ.**

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

ஒவ்வொரு ஓரிறை நம்பிக்கையாளரிடமும் இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்களின் திருமுகத்தைக் காண வேண்டுமென்ற ஏக்கம் இருக்கும். இறைத்தூதர்[ஸல்] அவர்களைக் காண வேண்டுமென்ற நமது ஏக்கமானது, அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றி, அல்லாஹ் தடுத்துள்ள விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலம் அல்லாஹ்வை நேர்மையாக நினைவில் கொள்ள வேண்டுமென்ற சிந்தனையை நமக்கு வழங்கட்டுமாக!

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே!**

நாம் சொர்க்கம் செல்வதற்கு உத்தரவாதமளிக்கும் நெறிமுறை அல்லது ஒழுக்கம் சம்பந்தமானக் கொள்கை ஒன்று உள்ளது என்பதை நீங்கள் அறிவீர்களா? ஒருமுறை, இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நவின்றார்கள்:

"நிச்சயமாக, உண்மையானது, நேர்மையின் பால் அழைத்துச் செல்லும்; நேர்மையானது, சொர்க்கத்தின் பால் அழைத்துச் செல்லும். தொடர்ந்து உண்மையையே பேசும் ஒருவர், உண்மையாளர்களில் ஒருவராக அல்லாஹ்வினால் எழுதப்படுகிறார்"

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே!**

உண்மைத்தன்மையாகிறது, ஓரிறை நம்பிக்கையாளரின் முழு வாழ்க்கையையும் வடிவமைக்கிறது. இத்தன்மையாகிறது ஒருவருக்கு, அவர் எப்படிப் பேச வேண்டும்; பொது வாழ்க்கையிலும் தனிப்பட்ட வாழ்க்கையிலும் எப்படி நடந்து கொள்ள வேண்டும்; அல்லாஹ்வின் படைப்புகளுடன் எப்படி தொடர்பு கொள்ள வேண்டும் எனும் நேர்மறையான ஆற்றலை வழங்குகிறது.

உண்மையானது, நம்மை சொர்க்கத்தின் பால் அழைத்துச் செல்லும் திறவுகோலாக இருக்கின்றதென்றால், பொய்யானது நம்மை நரகத்தின் பால் அழைத்துச் செல்வதாக உள்ளது. இக்கருத்தை இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நவின்ற மேற்கண்ட ஹதீதின் பின்வரும் தொடர்ச்சியில் காணலாம்:

........மேலும் நிச்சயமாக, பொய்யானது தீய வழியின் பால் அழைத்துச் செல்லும்; தீய, தவறான வழியானது நரகத்தின் பால் அழைத்துச் செல்லும்; தொடர்ந்து பொய் பேசும் ஒருவர், அல்லாஹ்வினால் பொய்யர்களில் ஒருவராக பதிவு செய்யப்படுகிறார்" [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி ரஹ், இமாம் முஸ்லிம் ரஹ்]

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே!**

ஒரு உண்மையான ஓரிறை நம்பிக்கையாளர், எப்போதும் உண்மையே பேச முயற்சிப்பார்; உண்மை பேசுவதை தனது நற்குணத்தின் ஒரு பகுதியாக அமைத்துக் கொள்வார். எந்த அளவுக்கெனில், அவர் அவ்விஷயத்தில் பிரபலமானவராக ஆகி விடுவார். அதே சமயம். அந்த ஓரிறை நம்பிக்கையாளர், தனது வாழ்க்கையிலிருந்து பொய்யை அகற்றுவதற்கு நேர்மையாக முயற்சிப்பார். இந்த சிறந்த நோக்கத்தை அடைவதற்கு, நமது வாழ்க்கையின் இரு அம்சங்களில்  பொய் உள்ளதா என நாம் சிந்தித்துப் பார்ப்பது அவசியமாகும். அவ்விரு அம்சங்கள் தான், நமது சொல்லும் செயல்களும் ஆகும். அவற்றை நாம் மறு மதிப்பீடு செய்து கொள்வது அவசியமாகும்.

**முதலாவதாக: நமது பேச்சில்.**

பேச்சில் பொய்யானது, அவதூறு கூறுதல், அவமதிப்புகள் மற்றும் இவை போன்ற மற்ற செயல்கள் மற்றும் நடத்தைகளின் மூலம் வெளிப்படும். சிலவேளைகளில், நகைச்சுவை எனும் பெயரில் பொய் கூறும் போது, அப்பொய் நமது உரையாடல்களிலும் வழக்கமான ஒன்றாக ஆகி விடும்.

**இரண்டாவதாக: நமது செயல்களில்.**

செயல்களில் பொய்யானது, நயவஞ்சகத்தனத்தின் வடிவில் வெளிப்படும்; வெளிப்படையில் நல்லவனாக நடித்துக் கொண்டு, உள்ரங்கத்தில் தீய சிந்தனையை ஏற்படுத்திக் கொள்வதுதான் நயவஞ்சகத்தனம் ஆகும். செயல்களில் பொய்யானது, அமானிதத்துக்கு மோசடி செய்தல் மற்றும் வாக்குறுதிக்கு மாற்றமாக நடந்து கொள்வது ஆகிய வடிவிலும் வெளிப்படும்.

**அருள்மிக்க ஜமாஅத்தார்களே**!

டிஜிடல் தொடர்புகள் எல்லையற்ற வகையில் அதிகரித்து விட்ட இக்காலத்தில், உண்மையாகவும் நேர்மையாகவும் இருப்பது மிகவும்

அவசியமாக உள்ளது. டிஜிடல் தளங்கள் - பல உடன்பாடான தாக்கங்களையும் பயன்களையும் ஏற்படுத்திய போதிலும் - எதிர்மறையான விஷயங்களை விட்டும் அது விடுபட்டதாக இல்லை. அந்த எதிர்மறையான விஷயங்கள், உண்மைக்கும் பொய்யுக்கும் மத்தியிலான வித்தியாசத்தை மங்கலாக்கி, அவற்றைப் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு ஆக்கி விடுகின்றன. இம்மாதிரியான தளங்கள், வெறுப்பு, மற்றவர்களுக்கு எதிராக அவதூறு கூறுதல், தவறான காட்சிகளைச் சித்தரித்தல் போன்றவற்றைப் பரப்புவதற்கான ஊடகங்களாக உள்ளன. இதுவும் ஒரு வகையான பொய்யாகும்.

ஒரு உண்மையான ஓரிறை நம்பிக்கையாளர், எப்போதும் நற்குணத்துடன் காணப்படுவார்; அவரது தனிப்பட்ட வாழ்க்கையும் அவ்வாறுதான் இருக்கும். டிஜிடல் உலகம் அல்லது சாதாரண வாழ்க்கை, தோற்றம் மற்றும் உள்ளம் ஆகிய அனைத்திலும் எப்போதும் உண்மையையும் நேர்மையையும் கடைப்பிடிப்பவராக இருப்பார். அன்பிற்குரிய சகோதரர்களே! இதற்குக் காரணமென்னவெனில், ஒரு ஓரிறை நம்பிக்கையாளர், எப்போதும் அவரது செயல்களை அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கின்றான்; அவர் பேசும் பேச்சுக்கள் அனைத்தையும் அல்லாஹ் கேட்டுக் கொண்டிருக்கின்றான்; மற்றவர்களிடமிருந்து எதனை அவர் மறைக்கின்றாரோ அதையும் அல்லாஹ் அறிகிறான் என்பவற்றைப் பரிபூரணமாக அறிபவராக இருக்கின்றார்.

நாம் தகவல்களை அல்லது நமது கருத்துக்களை டிஜிடல் தளங்களில் பகிர்ந்து கொள்ள விரும்பினால், நாம் பகிர்ந்து கொள்ள விரும்பும் கருத்துக்கள் சமுதாயத்துக்குப் பயனுள்ளதாக இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். பயனற்றவையாகவோ, தவறாக வழி நடத்துபவையாகவோ இல்லாமலிருப்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும். நாம் பகிர்ந்து கொள்ளும் விஷயங்களில் உண்மையாளராக இருப்போமாக!

**இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்கள் மீது அன்பு கொண்டுள்ளவர்களே!**

நாம் இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்கள் மீது உண்மையாக அன்பு கொண்டுள்ளவர்கள் எனும் ரீதியில், நமது சொல், செயல்கள், நமது உள்ளங்களில் ஏற்படும் சப்தங்கள் ஆகிய அனைத்திலும் உண்மைத்தன்மையுடன் காணப்பட வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் நம்மிடம் பொய் ஏற்பட்டு விடக் கூடாது. இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நமக்கு வழிகாட்டியுள்ளதன் பிரகாரம், நாம் உண்மையானவர்களாக ஆகுவதற்காக ஆர்வத்துடனும் நேர்மையாகவும் முயற்சிக்கும் போது தான், இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்கள் மீது அன்பு கொண்டுள்ளோம் எனக் கூறுவதற்கு நாம் தகுதியானவர்களாக ஆகுவோம். இறைத்தூதர்[ஸல்] அவர்களுக்கு அருளப்பட்ட திருக்குர்ஆனின் "அத்-தவ்பா" எனும் அத்தியாயத்தின் 119-வது வசனத்தில் காணப்படும் அல்லாஹ்வின் கட்டளையை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வோமாக:

يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ ٱتَّقُوا۟ ٱللَّهَ وَكُونُوا۟ مَعَ ٱلصَّـٰدِقِينَ ﴿١١٩﴾

பொருள்: "ஈமான் கொண்டவர்களே [ஓரிறை நம்பிக்கையாளர்களே!] அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; மேலும் உண்மையாளர்களுடன் நீங்களும் ஆகி விடுங்கள்"

யா அல்லாஹ்! எங்களின் குற்றம், குறைகளை மன்னிப்பாயாக! உன்னுடைய சொர்க்கத்தில் எங்களை நுழைய வைப்பாயாக! அதன் மூலம் உனது பாசத்திற்குரிய இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்களைச் சந்திக்கக் கூடிய பாக்கியத்தையும், இறைத்தூதர்களுடனும், தமது ஈமான் எனும் ஓரிறை நம்பிக்கையில் உண்மையாக இருந்தார்களே அவர்களுடனும் சொர்க்கத்தில் ஒன்றாக இருக்கும் பாக்கியத்தையும் எங்களுக்கு வழங்குவாயாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا اْلمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلِسْطِينَ وَفِيْ كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اَللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ

فَرَجًا، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلاَمَ وَالأَمْنَ وَالأَمَانَ لِلْعَالَمِ كُلِّهِ وَلِلنَّاسِ أَجْمَعِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.